**தலைப்பு 217 – நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி ஓட்டக் கூற்றுகள் என்பவற்றை கொண்டமைந்த 2020 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகைகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்ந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2020 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்புக்கள்

---

பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கமைவாகவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாகவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளை நிருணயித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டதில் 38(1)(ஈ) உப பிரிவு பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையின் பயனுள்ள தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அதிபதியின் சாராம்ச அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச்

சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்துள்ளது

(ஆ) முன்னனைய ஆண்டிற்கான நிதிக்கூற்று அறிக்கை தொடர்பாக என்னால் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 நிதிநிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனம், பொறித் தொகு-திகள் மற்றும் உபகரணங்களின் பெறு-மதி, நிதி நிலமை தொடர்பான கூற்று மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றுடன் ஒப்பு நோக்குகையில் ரூ. 92,481 வேறுபாடு காணப்பட்டது | திறைசேரியினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் கணக்குகளை தீர்க்கையில் மாற்றீடு பத்திரம் மூலம் நீக்கப்பட்ட சொத்துக்கள் எங்களது சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் மூலம் அகற்றி அவை மீண்டும் 2021 ஆம் ஆண்டு ஆரம்ப நிலுவையாக சீராக்குதல். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உண்மையான பெறுமதி நிதிக்கூற்றிலும் நிதியல்-லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றிலும் காட்டப்படல் வேண்டும் |

### 1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்கள் பேணப்படாததுடன் சில ஆவணங்கள் முறையாகவும் இற்றைப்படுத்தப்படாமலும் பேணப்பட்டிருந்தமை மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் | | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் நிதிப்-பிரமாணம் 502 (2) இற்கு அமைவாக நிலையான சொத்து-க்களின் ஆவணம் இற்றைப்-படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் தொட-ர்பான ஆவணங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது அத்தி-யாவசியமற்றது என வழிகாட்டி இலக்கம் 06 இல் 8 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் | சுற்றுநிருபங்கள் மற்றும் நிதிப் பிரமாணங்களு-க்கு ஏற்றவாறு நிலை-யான சொத்துக்கள் தொடர்பான ஆவண-ங்கள் பேணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிணை ஆவணங்கள் | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) அமைவாக பிணை வைக்கத் தேவையுடைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் விபரங்கள் அடங்கிய பிணை ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக பிணைப்பதிவேடு பேணப்படுவதல் மற்றும் பிணை வைக்காத உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதற்காக, உரிய நடவடிக்கைகள் எடுத்தல். | நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான ஆவணம் இற்றைப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | வாகனங்கள் பட்டியலிடப்படும் ஆவணம் | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) இற்கு அமைவாக வாகணங்களை பட்டியலிடப்படும் ஆவணம் பேணப்படவில்லை. | வாகனங்கள் பட்டியலிடப்படும் ஆவணம் உரியவாறு பேணுதல் தொடர்பாக தேவையான ஆலோசனை வழங்கப்பட்டது. | நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக வாகனங்களை பட்டியலிடப்படும் ஆவணம் பேணப்படல் அவசியமாகும். |
| (ஈ) | பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களினதும் வரவுப் பதிவேடு. | | |
| | அரச பெறுகை வழிகாட்டி கோவையின் 2.11.2 வழிகாட்டுதலுக்கு அமைவாக வரவுப் பதிவேடுகள் பேணப்படவில்லை | பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களினதும் வரவு பதியப்படுவதுடன் இவ் ஆண்டிலிருந்து முறையாக வரவுப் பதிவேடு பேணுதல். | அரச பெறுகை வழிகாட்டி கோவைக்கமைவாக குழுவின் செயலாளரினால் வரவுப் பதிவேடுகள் பேணப்படல் வேண்டும். |
| (உ) | அடியிதழ் சேர் ஆவணம் | | |
| | நிதி ஒழுங்குவிதி இலக்கம் 341 இற்கமைவாக அடியிதழ் ஆவணம் பேணப்பட்டிருக்கவில்லை | தற்போது அடியிதழ் தொடர்பான ஆவணம் பேணப்படல் நடைமுறையில் இருந்தாலும் அவை G.A.N. 20 படிவத்திற்கமைவாக இவ் வாண்லிருந்து நடைமுறைப்படுத்த நடவடிக்ககைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணத்திற் கமைவாக அடியிதழ் ஆவணங்கள் பேணப்படல் வேண்டும். |

## 2. நிதிக்கூற்று மீளாய்வு

### 2.1. செலவின முகாமைத்துவம்

கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| செலவு விடயத்தில் மொத்த தேறிய ஒதுக்கீடும் எஞ்சி இருந்ததுடன், நான்கு செலவு விடயங்களில் தேறிய ஒதுக்கீட்டிலிருந்து 24% தொடக்கம் 47% வரையிலான எல்லைக்குள் எஞ்சியிருந்தது. | கோவிட் 19 தொற்று காரணமாக நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படவில்லை. | மதிப்பிடல் செவ்வையாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.2 கடப்பாடுகளும் பொறுப்புகளும்

**கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மோட்டார் வண்டிக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டிய ரூபா.82,007 ஆன காப்புறுதி தவணைக் கட்டணம் பொறுப்புகளின் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை | கடப்பாடுகளும் பொறுப்புகளுக்குமான ஆவணத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளுதல். | பொறுப்புக்கள் கூற்றில் அனைத்து பொறுப்புக்களையும் உள்ளடக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி அச்சீடுகளில் குறிப்பிடப்படாத மொத்தம் ரூபா.398,915 ஆன 44 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுடன் முன் வைக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பின்னர் பெறப்பட்ட பணவுறுதிகள் நிதிக் கூற்றுடன் முன்வைக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பான கூற்றில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் திறைசேரி அச்சீடுகளில் உள் வாங்கப்படவில்லை. | திறைசேரி அச்சீட்டுகளுடன் பொறுப்புகள் தொடர்பான கூற்று ஒத்திருத்தல் வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுடன் முன் வைக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படாத மொத்தம் ரூபா.122,169 இற்கான 15 பொறுப்புக்கள் திறைசேரி அச்சீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | எங்களது நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட பொறுப்புகள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதனால் திறைசேரி அச்சீடுகளின் படி திணைக்களத்தின் பொறுப்புகள் தொடர்பான கூற்றுடன் ஒப்புநோக்குதல் சிரமமாகும். | மேற்கூறப்பட்டவை |
| (ஈ) | 11 செலவின விடயங்களுக்கு ஏற்புடையதாக எஞ்சிய ஒதுக்கீடுகளை விஞ்சி ரூபா. 3,020,146 ஆன பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த மீண்டுவருஞ் சேவைகள் அல்லது வழங்கல் தொடர்பான பொறுப்புகளை மேற்கொண்டுள்ளதுடன், பெரும்பாலும் திசெம்பர் மாதத்திற்கான ரசீதுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் கிடைக்கப்பெறும். | ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக பொறுப்புகளை மேற்கொள்ளுதலாகாது. |

## 2.3. சட்ட திட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்ட திட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு-விதிகளுக்கு அமைவாக செயற்பட்டமை | இண்காமை | | |
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்-கையின்3.1 மற்றும் 33 ஆம் பிரிவுகள் | திணைக்களத்து வாகணங்களின் எரி-பொருள் செலவழிவு தொடர்பாக பரிசோ-தனை செய்து குறிப்புகள் பேணப்-படாமை | 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்று நிலைமை காரணமாக பல் மாதங்கள் அலுவல-லகம் மூடப்பட்டிருந்த-மையால் வாகனப் பாவ-னை குறைவாக இருந்த-தால், 2021 ஆம் ஆண்டில் எரிபொருள் செலவழிவு தொடர்பான பரிசோத-னை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமை வாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2018.01.24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை | மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்க உத்தி-யோகத்தர்களின் விபரம் சேகரிக்கப்பட்டு இருந்-தாலும், கொவிட் 19 தொற்று நிலைமை கார-ணமாக மனித வள அபிவிருத்தி திட்டம் தயா-ரித்து முடிவுறுத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கப்-பெறவில்லை. | மேற்கூறப்பட்டவை |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு முதல் மீளாய்விற்கான ஆண்டு வரை 64 ஆண்டுகள் கடந்திருந்தாலும், திணைக்ககளத்தின் செயற்பணி பிரகாரம் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக உலக சிறுவர் உரிமை சாசனத்திற்கு ஏற்ப தேசிய கொள்கைகள் தயாரித்தல் மற்றும் அதற்குப் ஏற்புடையதான சட்ட திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை மாற்று பாதுகாப்பு கொள்கை தொடர்பாக 2019 மார்ச் 06 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டி-ருந்தாலும் அக்கொள்கை, கணக்காய்வு தினமான 2021 மார்ச் 25 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாற்று பாதுகாப்பு கொள்-கையை அடிப்படையாகக்-கொண்டு சனத்தொகை மற்-றும் புள்ளிவிபரவியல் திணை-க்களத்துடன் இணைந்து சிறுவர் இல்லங்களின் சிறு-வர்கள் தொடர்பான கணக-கெடுப்பு மேற்கொள்ளப்பட்-டது. கணக்கெடுப்பின் மூலம் வெளிப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்றிட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்-பட்டுள்ளன. | செயற்பணிக்கமைவாக செயலாற்றுவதற்கு தேசிய கொள்கை தயாரித்து நடைமுறை-ப்படுத்தல் வேண்டும். |

## 3.2 திட்டமிடல்

-----------------

கீழ் வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கம் அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாக செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கம் அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | சுற்றுநிருபத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

## 3.3 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| | அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள-த்தின் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைப்பு, ஒத்துழை-ப்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பான கலந்துரை-யாடல் என்பன திணைக்க-ளத்தின் பிரதான கடமை-யாக இனங்காணப்பட்டிரு-ந்தாலும் 2018 ஆம் ஆண்டில் மாகாண நன்ன-டத்தை ஆணையாளர்-களின் 3 கூட்டங்களும் 2019 ஆம் ஆண்டில் ஒரு கூட்டமும் மட்டுமே நடைபெற்றிருந்தன. | 2019.03.21 மற்றும் 22 ஆகிய இரண்டு தினங்களிலும் அனைத்து மாகாண நன்னட-த்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணை-யாளர்களுக்கும் மாகாணங்க-ளிலுள்ள சிரேட்ட நன்னட-த்தை உத்தியோகத்தர்க-ளுக்கும் இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு நடாத்தல். | திணைக்களத்தின் கடமை பொறுப்புகளை நிறைவேற்-றுவதற்காக வினைத்திற-னுடன் செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | கவனிப்பு தேவைப்படும் சிறுவர்களுக்கான பாது-காப்பு திட்டம் செயற்படு-த்துவதற்காக மீளாய்விற்-கான ஆண்டில் | பாதுகாப்பு திட்டம் பொருட்டு ஒதுக்கீடுகளை வழங்கும்போது சரியாக தயாரிக்கப்பட்ட திட்டம் ஆவணப்படுத்தப்பட்டு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. குறைபாடு-கள் | உரிய முறைமைக்கு அமைவாக மாகாண ஆணையாளர்களின் கடமைப் பொறுப்புகள் தொடர்பாக பின்னாய்வு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.5,587,500 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிதி ஆயினும் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 167 சிறுவர்களுக்காக ரூபா. 5,575,000 தொகை செலவிடப்பட்டுள்ளதாக முன்னேற்ற அறிக்கை மூலம் அவதானிக்கப்பட்டது. ஆயினும் பாதுகாப்பு திட்டங்களின் பொருட்டு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் தொடர்-பாக முறையாக ஆவணப்படுத்தாதிருத்தல், சிறுவர்களை தெரிவு செய்வதற்கு உறுதியான முறைமை தயாரிக்கப்படாதிருத்தல், பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்ற ஒதுக்கீடுகள் குறிப்பிட்ட காலவரையரைக்குள் குறிப்பிட்ட செயற்பாடுகளின் பொருட்டு பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறிவதற்கு பின்னாய்வு செயற்பாடுகள் இல்லாதிருத்தல் போன்ற குறைப்பாடுகள் காணப்பட்டன. | அல்லாத திட்டங்கள் எல்லாவற்றையும் தரவு முறைமைக்கு உள்ளடக்கப்பட்-டுள்ளன எனவும், பாதுகாப்பு திட்டம் தொரடர்பான ஒதுக்கீட்டி-னை வழங்குவதற்கு சிறுவர்-களை தெரிவு செய்கையில் முறையானதும் திணைக்களம் சார்ந்த குழுவினரால் மேற்கொள்ளப்படுகின்றதெனவும், கிடைக்கப்பெறுகின்ற ஒதுக்கீடு வரையறுக்கப்பட்டுள்ளதால் சிறு-வர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்ட பினனர் முதன்மைபடுத்தப்பட்டு அதன் அடிப்படையில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்-டிய திட்டங்களுக்கு முக்கிய-த்துவம் வழங்கப்படுகின்றதென-வும் மாவட்ட உத்தியோக-த்தர்களால் மாதாந்தம் முன்னே-ற்றத்தினை திணைக்களத்திடம் அறிக்கையிடப்படுகின்றதெனவும் குறிப்பிடப்பட்டது. | நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் பிரதான பொறுப்பான 1939 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் திருத்தம் செய்தல் மற்றும் சிறுவர் இல்லங்களுக்கான கட்டளைச் சட்டம் திருத்தம் செய்தல் என்பன மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் முடிவுறுத்தப்பட-வில்லை | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச்சட்டம் திருத்தம் செய்யும் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளது | உடனடியாக திருத்தங்கள் தொடர்பான நடவடிக்கைகள் முடிவுறுத்தல் வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை திணைக்க-ளத்திடம் பதிவு செய்ய-ப்பட்டுள்ள சிறுவர் துஷ்-பிரயோகம் சம்பந்தமான 61,238 முறைப்பாடுகளில், 17,732 | பின்னூட்டல் செயற்பாடுகள் மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகிறது. விசேட சந்தர்ப்பங்களின் போது தேவைகளுக்கேற்றவாறு பிரதான அலுவலகத்தால் பின்னூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்- | திணைக்களத்தால் முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் தொடர்பாக பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| முறைப்பாடுகள் தொடர்பில் குறுகியகால தீர்வுகளும், 10,577 முறை-ப்பாடுகளின் பொருட்டு தீர்வுகளுக்காக வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப-ப்பட்டுள்ளதாகவும், 485 முறைப்பாடுகள் வேறு எனவும் குறிப்பிடப்பட்டி-ருந்தது. முறைப்பாடுகள் தொடர்பாக வழங்கிய தீர்வுகளின் முன்னேற்றம் தொடர்பான உசாவுதல்-களையோ பின்னூட்டல்-களையோ திணைக்-களத்தால் மேற்கொள்ள-ப்படவில்லை என்பதுடன், கவனம் செலுத்தப்பட வேண்டிய மாவட்டங்கள் மற்றும் துறைகள் தொட-ர்பாகவும் இனங்காணப்பட-வில்லை | ளப்படுகின்றன. . |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின் வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------ | ---------------------- | ------------------- |
| (அ) | 2017 ஆம் ஆண்டில் 3 சந்தர்பங்களில் ரூபா 418,225 ஆன செலவினம் மேற்கொண்டு பழுது பார்க்கப்பட்ட மோட்டார் வாகனம் அவ் ஆண்டி-லேயே பாவனையில் இரு-ந்து அகற்றப்பட்டு சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோ-சனை நிலையத்தில் பய-னற்று நிறுத்தி வைக்கப்-பட்டிருந்தது. | குறிப்பிட்ட வாகனம் அகற்றுவ-தற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பழுது பார்க்கப்பட்டு பயன் படுத்தக்கூடிய வாகனங்களை மட்டுமே பழுதுபார்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் அகற்றப்பட்ட ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் 08 உருப்படிகள் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அகற்றப்படுதலின் கீழ் காட்டப்பட்டிருக்க-வில்லை. | 2022 ஆகும் போது நிதியல்லாத சொத்துக்களை கணக்கு வைப்-பதற்கு ஏற்புடையதான பிரச்சி-னைகளை தீர்ப்பதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளுதல். | நிதியல்லாத சொத்து தொடர்பான கூற்றில் அகற்றப்பட்ட சொத்துக்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் மாதம் தொடக்கம் ஆணையாளர் பதவி உட்பட சிரேட்ட நிலை உத்தியோகத்தர் பதவிகளுக்காக 02 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. சட்ட உத்தி யோகத்தர் பதவிக்காக திணைக-களத்திற்கு உத்தியோகத்தர் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்-படவில்லை | சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. | அத்தியாவசியமான சிரேட்ட மட்டத்திலான பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும். |